







# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 30 6.08.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## காஷ்டைகள்

18 நிமிஷங்கள் ஒரு காஷ்டை.

18 காஷ்டைகள் ஒரு கலை.

30 கலை ஒரு க்ஷணம்.

12 க்ஷணம் ஒரு முஹூர்த்தம்

30 முஹூர்த்தம் இரவு பகல் கொண்ட ஒரு நாள்

15 நாள் ஒரு பக்ஷம்

2 பக்ஷம் ஒரு மாதம்

2 மாதம் ஒரு ருது.

6 ருது ஒரு வருஷம்.

*********************************************************************************

## சாந்தி பாடம்

ஸஹ நா வவது, ஸஹ நௌ புனக்து, ஸஹ வீர்யம் கரவா வஹை, தேஜஸ்வி நாவதீத மஸ்து, மா வித்விஷாவஹை, ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

பொருள் : குரு சிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் சேர்ந்து அந்தப் பரப் பிரம்மம் காப்பாற்றட்டும். எங்கள் இருவரையும், சேர்த்தே வளர்க்கட்டும். நாங்கள் இருவரும் சேர்ந்தே வீரியத் துடன் உழைப் போம். எங்கள் அத்தியயனம் கூர்மையுள்ளதாகவும், பிரகாசமுள்ளதாகவும், ஆக வேண்டும். நாங்கள் ஒருபோதும் ஒருவரையொருவர் துவேக்ஷிக்காமலிருக்க வேண்டும். அதனால் எங்கும் சாந்தி நிலவுக!!!

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## தவத்தின் பெருமை

1. உண்மை பேசுதல் தவம்

2.உண்மையாக நடத்தல் தவம்

3. கேள்வி தவம்

**4.** அமைதி தவம்

**5.** புலனடக்கம் தவம்

**6.** மனவடக்கம் தவம்

**7.** ஈகை தவம்

**8.**வேள்வி செய்தல் தவம்

**9.** பூ : புவ: ஸுவ : என்பது பிரம்மம்.

**10.** இதை உபாஸித்தலும் தவம்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## சூரிய மண்டலத்தில் பரப்பிரம்ம உபாஸனை

உண்மையில் சூரியன் அந்த பர மாத்மா! ஆதித்யன்! அவனுடைய அந்த ஒளியை, வேதமயமாகவும், அதில் வேத புருஷனாகவும் தியானிக்க வேண்டும். அங்கேயே பரமாத்மா உறைவதாகவும் நினைக்க வேண்டும். அல்லது தியானிக்க வேண்டும்.

அங்குதான் பிரசித்தமான ருக்வேத மந்திரங்கள் (அந்த ஒளியறையில்) இருக் கின்றன. அதுவே ருக்வேத மண்டலங்களின் உறைவிடம்.

அந்த ஜ்வாலையில் உள்ள அவனே ஸாம வேத மந்திரங்கள். அதுவே சாம வேத கீதங்களின் உறைவிடம்.

இந்த மண்டலத்தின் ஜ்வாலையில் உள்ள புருஷன் எவனோ, அவன் யஜுர் வேத மந்திரங்களின் வடிவாய்க் கொண் டவன். அது யஜுர் வேதத்தின் உறை விடம்.

வேதம் "த்ரயீவித்யா" என்ற மூன்றுமே சூரிய மண்டலத்தில் பிரகாசிக் கிறது. 'அதர்வண வேதம்' பின்னால் தோன்றியதால் அது சேர்க்கப்பட வில்லை. அந்த ஒளியின் நடுவே உறை பவன்தான் அந்தப் பொன் வடிவான பரமாத்மா!

"ஸ பிரம்ம, ஸ சிவ, ஸ ஹரி"

"அவனே யகல் ஞாலம் படைத்திடந்தான்
அவனே யஃதுண்டுமிழ்ந் தானனந்தான்
அவனே யவனு மவனு மவனும்
அவனே மற்றெல்லாமும் யறிந்தனமே"

அவன்,

"ஆணல்லன், பெண்ணல்லன் அலியுமல்லன்

காணனுமாகா னுனல்ல னில்லையல்லன்

பேணுங்கால் பேணு முருவாக,

மல்லனுமாம்

கோணை பெரிதுடை தெம் பெம்மானை

கூறுதலே'

--(நம்மாழ்வார்)

இது ஆழ்வார்களின் அனுபவம். சூர்ய ரூபியாகிய இந்தப் பகவானைச் சூரியோதய வேளையில் நன்றாக ஸ்நானம் செய்து, கிழக்கு நோக்கி அசையாமல் நின்று கொண்டு தியானிப்பவர்களும் உண்டு. இந்தப் பகவானை உள்ளன்புடன், உண்மை உவகையுடன் இடையர்களும் பார்க்கின்றனர். தண்ணீர் கொண்டுவரும் பெண்களும் பார்க்கின்றனர். எல்லாப் பிராணிகளும் இவரைப் பார்க்கின்றன. அப்படி எல்லோராலும் பார்க்கப்பட்ட அவர் நமக்கு பரமானந்தத்தை அளிக்கிறார். இங்கு ஒரு பாடல் எழுதிக்காண் பிப்பது மிகப் பொருத்தமாகயிருக்கும்.

“என்ன தவம் செய்தனை செய்தனை - யசோதே

எங்கும் நிறை பரப்பிரம்மம் உன்னை அம்மாவென்று அழைக்க "

கோபர்களின் சார்பில் யசோதா அந்த பிரம்மத்தை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறாள்.

வேதம், சாத்திரம் அறிவில்லாத, ஸம்ஸ்கார அறிவில்லாத எல்லோருக்கும் காட்சி அளிப்பதற்காகவே பகவான் சூரியன் வடிவம் கொண்டு, விளங்குகிறார். அவரே மூன்று வேதங்களாகவும், மூன்று மூர்த்திகளாகவும், மூன்று காலங்க ளாகவும், தோன்றுகிறார்.

சூரிய மண்டலத்தில் உள்ள வேத ஸ்வரூபியாக பரமாத்மாவை உபாசிக்கும் முறை கூறப்படுகிறது.

*************************************************************************************